## 2019 முதல் 2022ஆம் ஆண்டுகளில் – 3 நிதி ஆண்டுகளில்

# ரூ.968.111 கோடி மதிப்பிலான மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கை!

## சட்டப்பேரவையில் – நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து உரையாற்றினார்! குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றம்!

**சென்னை, மே 3 -**

**கடந்த 2019 முதல் 2022ம் ஆண்டு வரையிலான 3 நிதியாண்டுகளில், ரூ.968.11 கோடி மதிப்பிலான மிகைச் செலவினங்களுக்கான மானிய கோரிக்கைகளை சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து உரையாற்றினார். அவை குரல் வாக்கெடுப்பு மூலமாக நிறைவேற்றப்பட்டது.**

அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:-

2019-2020 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2019-2020 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2019-2020 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.942 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின்முன் வைக்கப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச்செலவு, “பள்ளிக் கல்வித் துறை”, பாசனம் (பொதுப் பணித் துறை)” மற்றும் “உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)” ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் நிதியாண்டில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டதாலும் சரண் விடுப்பு காசாக்குதல் அதிகரித்ததாலும் மற்றும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் தொகை மற்றும் அகவிலைப் படி ஆகியவை உயர்த்தப்பட்டதாலும் “பள்ளிக் கல்வித் துறை” மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

பணியாரளமைப்பு, இயந்திரங்கள் மற்றும் சாதனங்களுக்கான கூடுதல் விழுக்காடு செலவுகள் மற்றும் பல்வேறு திட்டங்கள்/திட்டப் பணிகள்/பெருந்திட்டங்கள் மீதான வட்டிக் கட்டணங்களால் “பாசனம் (பொதுப் பணித் துறை)” மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதங்களில் திருப்பத்தூர், ராணிப்பேட்டை, தென்காசி, செங்கல்பட்டு மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய ஐந்து புதிய மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டதாலும், ஊதியச் செலுத்துகை அதிகரித்ததன் காரணமாகவும் “உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)” மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

எனவே, 2019-2020 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன்.

2020-2021 ஆம் ஆண்டில், ஒரு மானியக் கோரிக்கையின்கீழ், அந்த ஆண்டிற்கு



அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கையினை இம்மான்றத்தின் முன்வைக்க விழைகிறேன்.

2020-2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், ஒரு குறிப்பிட்ட மானிய கோரிகையின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி யொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்தபிறகு, 2020-2021 ஆம் ஆண்டில் அம்மானியத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி யொதுக்கத்திற்கும் மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் அம்மானியக் கோரிக்கை வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 2020-2021 ஆம் ஆண்டில் 20.87 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கை இம்மான்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

2020-2021 ஆம் ஆண்டில் மிகைச் செலவு “தொழில் துறை” மானியத்தின்கீழ் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பத்தூர், ஆம்பூர் மற்றும் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு பணியாளர்களின் சம்பள நிலுவைத் தொகை, மின் கட்டணம் மற்றும் கடனை செலுத்துதலுக்கான வழிவகை முன்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டதால் “தொழில் துறை” மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

எனவே, 2020-2021 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைக்கு இம்மான்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன்.

2020-2021ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

2021-2022 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ், அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மான்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

2021-2022 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு. 2021-2022 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 2021-2022 ஆம் ஆண்டில் 5.24 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச் செலவு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் “மனித வள மற்றும் மேலாண்மைத் துறை”, ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் நிதியாண்டில், கோவளம் வடிநிலப் பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளுக்கு நிலையான நகர்ப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்திட நேரடி செலுத்துகையினை புத்தக சரிகட்டுதல் செய்ததன் காரணமாக “நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை” மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

இராணிப்பேட்டை மாவட்டத்தின் மேல்விஷாரத்தில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கூடுதல் கொள்ளளவை உருவாக்கியதால் “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை” மானியத்தின் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

பணியாளரமைப்பு, இயந்திரங்கள் மற்றும் சாதனங்களுக்கான சதவிகிதக் கட்டணங்களை புத்தக சரிக்கட்டல் செய்ததால் மனித வள மேம்பாட்டு மேலாண்மைத் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

எனவே, 2021-2022 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.


நாள் : 03.05.2025
சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி.
இடம் : வேளச்சேரி
சுடுகாட்டில் நல்லடக்கம்
செய்யப்படும்



கண்ணீர் அஞ்சலி

விழுப்புரம் வடக்கு மாவட்டம் – மரக்காணம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர்
திரு. இரா.தயாளன் MA., அவர்களின் மாமியாரும்,
மரக்காணம் ஒன்றிய கவுன்சிலர்
திருமதி. பவித்ரா தயாளன் அவர்களின் தாயார்

தெய்வத்திரு. பெருமாள் அவர்கள் மனைவி
பேபி பெருமாள்
என் : 50/1 ஓரண்டியம்மன் கோவில் தெரு, வேளச்சேரி, சென்னை 42
அவர்கள் 2–5–2025 வெள்ளிக்கிழமை
அதிகாலை 4 மணி அளவில் இயற்கை எய்தினார்
உடல் நாளை 3–5–2025 சனிக்கிழமை 2 மணி அளவில்
வேளச்சேரி சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை
ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்

பிரிவால் வாடும்
மகன்: திரு.P.கணேசன்
மருமகள்: திருமதி. இந்துஜா
மகள்கள்: திருமதி. மோகனப்பிரியா ஜெயராஜ்
திருமதி. பவித்ரா தயாளன்
பேரன் பேத்திகள் மற்றும் குடும்பத்தினர்கள்